# பத்தி எழுத்துக்கள்

செயலட்டை தரம் 10

## தமிழ் இலக்கிய நயம்

தொகுப்பு திரு.சுரேஸ்பிரதீபன்
ஸ்ரீவாணி தமிழ் மகா வித்தியாலயம்
தெஹியோவிட்ட கல்வி வலயம்

# பத்தி எழுத்துக்கள்

- குறு வினாக்கள்

1. “மரம் என்பது உயர்திணை” பத்தி எழுத்தின் ஆசிரியர் பெயர் என்ன?
2. சரித்திர சாலையில் நிலைப்பெற்ற மரங்கள் எவை?
3. மனிதன் படைத்த மரங்கள் எவை?
4. மனித வாழ்வில் பிறப்பு முதல் இறப்பு வரை மரங்கள் பயன்படுகளை குறிப்பிடவும்?
5. மனிதனுக்கும் மரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் யாவை என பத்தி ஆசிரியர் கூறுகிறார்?
6. மரம் என்பது உயர்திணை என வலியுறுத்த பத்தி ஆசிரியர் கூறும் விடயங்கள் எவை?

- பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக,

அவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலாகி, நடைபழகும் பருவத்தில் நடை வண்டியாகி, பள்ளிப் பருவத்தில் ஏடுகளாகி, மணப்பருவத்தில் கட்டிலாகி, கிழப்பருவத்தில் ஊன்றுகோலாகி, இறந்த பிறகும் பாடையாகி சிதையிலும் உடன்கட்டை ஏறி அவன் சாம்பலோடு சாம்பலாகிக் கலந்து மனிதனுக்காகவே தங்களை முற்றிலும் அர்ப்பணம் செய்யும் மரங்கள்.

மனிதனின் தாகத்திற்குப் பானம் தந்து, பசிக்கு உணவூட்டி, உடுத்த உடையாகி, வசிக்க வீடாகி, நோய்க்கு மருந்தாகி, அவன் பயணத்திற்குச் சக்கரங்களாகி, அவன் வேலைகளில் கைகளுக்குக் கைகளாகி, அவன் சுவாசத்திற்காகக் காற்றைச் சலித்துக் கொடுத்து, அவனுக்காக மேகங்களைக் கெஞ்சிப்பிச்சை கேட்டு, மட்டும் இல்லையென்றால் மனிதன் வாழ்ந்திருப்பானா?

1. இவ் உரைப்பகுதியில் குறிப்பிடப்படும் மையக்கருத்து என்ன?
2. மரத்தின் பயன்கள் எவை?
3. “உடன்கட்டை ஏறி சாம்பலோடு சாம்பலாகி கலந்து” என்ற வரிகளில் வெளிப்படும் உணர்வினை விளக்குக?
4. ஆசிரியரின் மொழி நடையை ஆராய்க?
5. “மேகங்களை பிச்சைக்கேட்டல்” என்பதன்பொருள் என்ன?

- பத்தி எழுத்து, “மரம் என்பது உயர்திணை” எனும் பகுதியில் இருந்து பின்வரும் தலைப்புகளை விளக்குக,
    1. மரம் என்பது உயர்திணை என வலியுறுத்த பத்தி ஆசிரியர் கையாண்ட உத்திகள்
    2. மனிதனுக்கும் மரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள்